भारतीय गैर न्यायिक

एक सौ रुपये

Rs. 100

रु. 100

ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி) தஞ்சாவூர் ₹100/-

EL 978340

09-09-2024

N. Jayaraman
Stampvendor
Licence No: 32/2008
Sub-Registrar's Office Campus
Vallam - 613 403.

TREASURY OFFICE THANJAVUR

**தஞ்சாவூர் - தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்புத்துறை**

**மற்றும்**

**தஞ்சாவூர், குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியின் (தன்னாட்சி) ஆங்கிலத் துறை**

**ஆகிய இரு கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)**

தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறையும், தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியின் (தன்னாட்சி) ஆங்கிலத்துறையும் இணைந்து 09.09.2024 அன்று மேற்கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

PRINCIPAL,
Kunthavai Naacchiyaar Govt. Arts College for Women (A),
Thanjavur - 613 007.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மொழிபெயர்ப்புத்துறை மற்றும் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியின் ஆங்கிலத்துறை ஆகிய இரு நிறுவனங்களுக்கும் இடையே கல்வி, ஆராய்ச்சிசார் பரிமாற்றங்கள் (Academic) மற்றும் புறப்பாட நடவடிக்கைகள் (Co-Curricular Activities) தொடர்பாகப் புரிந்துணர்வு அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் செயல்பாடுகள் இரு நிறுவனங்களின் தலைவர்களும் அவரவர் சார்பில் நியமிக்கப்பெறும் ஆய்வுத்திறனையும் பட்டறிவுடன் கூடிய ஒருங்கிணைப்பாளர்களையும் சார்ந்தவகையாகும்.

- ஒப்பந்தத்தினைக் கொண்டு இரு நிறுவனங்களும் வேறு எந்த அலுவல் நிலையிலான வேண்டுகோளினையும் கேட்கக்கூடாது.
- இரு நிறுவனங்களின் அவ்வப்போதைய நிதிநிலையைப் பொறுத்து நிதிசார் தேவைகளை முறையாகப் பேசிப் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.
- இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலில் மூன்று ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும். ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்களும் மேற்குறிப்பிட்ட பொருண்மைகளில் வெவ்வேறு தளங்களில் தனித்தனியே ஈடுபட்டுக்கொள்ளவும், செயல்படவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்து தருகின்றது.
- இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அறிவு மேம்பாட்டிற்கு மட்டும் ஏற்படுத்திக் கொள்ளப்பெறுகின்றது. வணிக நோக்கில் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது. இரு நிறுவங்களின் பெயர்களை இருவரும் பயன்படுத்துவதற்கு முன்பாக விரிவாகக் கலந்தாய்வு செய்து உரிய அனுமதியுடன் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ஒப்பந்தக்காலத்தில் இரு நிறுவனங்கள் நடத்தத் திட்டமிடப்பெறும் நிகழ்வுகள், கருத்தரங்குகள், கருத்தரங்க முன்மொழிவுகள், அழைப்பிதழ்கள், பதாகைக் (Flex) குறிப்பேடு, கோப்புகள் முதலான அனைத்து ஏற்பாடுகளும் விரிவான, வெளிப்படையான, முறையான கலந்தாய்வுகளின் மூலமாகச் செய்து கொள்ளப்பட வேண்டும்.
- இரு நிறுவனங்களும் முன்னரே தீர்மானித்துச் செயல்பாடுகளைச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கையாக வெளியிடும் பொழுது, இருவரும் எழுத்து வடிவில், இசைவு பெற்றே வெளியிட வேண்டும்.
- வரையறுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட துறைகளின் ஆய்வுக்களங்களில் கீழ்க்காணும் பொதுத்தன்மையில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பினை நல்குவது என ஒருமனதாகத் தீர்மானிக்கப்பெற்று இவ்வொப்பந்தம் உருவாக்கப் பெறுகிறது.

பதிவாளர் [பொ]
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

PRINCIPAL,
Kunthavai Naacchiyaar Govt. Arts College for Women (A),
Thanjavur - 613 007.

**புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் செயல்படுத்தும் திட்டங்கள்**

- தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி மாணவ மாணவிகளின் திறனை மேம்படுத்தும் வகையில் (Skill Development) பயிற்சிகள் வழங்கப்படுதல்
- புலம் சார் இணைச் செயல்பாடுகள் (Co Curricular Activities) தொடர்பான திறன்களை வளர்த்தல்
- மொழிபெயர்ப்புத்துறை சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்வதில் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல்
- ஒரு மொழியிலுள்ள நூலை மற்றொரு மொழியில் மொழிபெயர்க்கும்போது உள்ள கலைச்சொல்லாக்கச் சிக்கல்களை மாணவர்களை அறியச்செய்தல்
- மொழிபெயர்ப்பியலின் தொடக்க வளர்ச்சியில் இருந்து வளர்ச்சியினையும் மாற்றங்களையும் மாணவர்களுக்குத் தெரியப்படுத்துதல்
- தமிழக ஆளுமையாளர்களின் மொழிபெயர்ப்புத் துறை திறன், அவர்களின் அனுபவங்களைப் பற்றி மாணவர்களை அறியச் செய்தல்
- கணினி வழியில் மொழிபெயர்த்தல், மொழிபெயர்ப்பின் வளர்ச்சியினைக் கண்டறியும் தொழில்நுட்பங்களை மாணவர்கள் அறியச்செய்தல்.

மேற்கண்ட ஒப்பந்தம் மூலம் இணைந்து உருவாக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகள், தொகுப்பு நூல்கள், ஆய்வேடுகள் முதலான வெளியீடுகளை இரு நிறுவனங்களும் இணைந்து வெளியிடுதல்.

அறிவுசார் கட்டமைப்பு நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கும் இருதரப்பு மாணவர்களின் ஆளுமை மிக்க எதிர்காலத் தலைமுறையை வளர்த்தெடுக்கும் நோக்கில் மட்டுமே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப் பெறுகின்றது.

மேலும் எதிர்வரும் புதிய நடைமுறைகளைக் குறிப்பாக நவீனகால நுட்பங்களைச் செயல்படுத்த வேண்டியுள்ள இரு நிறுவனங்களும் முன்கூட்டியே திட்டமிட்டுக் கலந்து ஆலோசனை செய்து, அவற்றைப் பின்னர் தனி மேம்படுத்தல் புரிந்துணர்வு ஒப்பந்தமாக நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம். இரு நிறுவனங்களும் இணைந்து நிகழ்த்தும் தத்தம் செயல்பாடுகளைத் தனித்தனியே ஆவணப்படுத்திக் கொள்ளலாம்.

ஒப்பந்த நிறுவனமும் அடுத்த நிறுவனங்களிடமிருந்து பெற்ற தகவல்களைக் கமுக்க (இரகசிய) அறிக்கைகளாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும்.

பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

PRINCIPAL,
Kunthavai Naacchiyaar Govt. Arts College for Women (A)
Thanjavur - 613 007.

எழுத்து வடிவிலான / ஆவண வடிவிலான முன்வரைவுகள் இரு நிறுவனங்களும் நன்கு சோதிக்கப் பெற்றபின்னரே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகின்றன. 09.09.2024 முதல் 08.09.2027 வரை ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருக்கும்.

மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்கு இடையில் இச்செயல்பாடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டிய சூழல் ஏற்பட்டாலும் அல்லது கால நீட்டிப்புச் செய்துகொள்ள முற்பட்டாலும் மூன்று மாதத்திற்கு முன்னதாக எழுத்து வடிவில் தெரிவித்துக் கொண்ட பின்னர் இவ்வொப்பந்ததை நீக்கிக்கொள்ளவும் / நீட்டித்துக்கொள்ளவும் இரு நபர்களும் ஒப்புக்கொள்கின்றனர் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வொப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பெறுகிறது.

| | |
|---|---|
| பதிவாளர்(பொ) | முதல்வர் |
| தமிழ்ப் பல்கலைக்கழகம் | குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த) |
| தஞ்சாவூர்-10 | தஞ்சாவூர் |

சாட்சிகள்

1. இரா. சு. முருகன். 09/09/2024 — R. Ramapriya (R. RAMAPRIYA)

2. 09/09/2024 (முனைவர் ப. ...) — (DR. A. SABURUNNISA)